செய்தி வெளியீடு எண்: 268 நாள் : 08.06.2016

- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 6வது முறையாக ஆட்சி பொறுப்பேற்றதும், விவசாயிகளின் நலன் கருதி ரூ.5,780 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி.**
- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தென்னை விவசாயிகளின் நலன் கருதி 20 மாவட்டங்களில் நேரடி கொப்பரை கொள்முதல் நிலையங்கள் திறக்க உத்தரவு.**
- **கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ.489.63 கோடியில் 3,879 சேமிப்பு கிடங்குகள்.**
- **கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் தட் டுப்பாடின்றி அத்தியாவசியப் பொருட்களை சீராக வழங்க உத்தரவு.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் இன்று **(8.6.2016)** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களால் ஏழை, எளிய நடுத்தர மக்கள் குறிப்பாக விவசாயிகள் பயனடையும் வகையில் கூட்டுறவுத்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது: **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், 6வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், வேளாண் பெருமக்களின் நலன் காக்கும் வகையில் கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர்க் கடன், நடுத்தர காலக் கடன் மற்றும் நீண்டகாலக் கடன் ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும் என்னும் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து 31.3.2016 வரை சிறு, குறு விவசாயிகளால் பெறப்பட்ட ரூ.5,780 கோடி அளவிலான பயிர்க் கடன், நடுத்தரகாலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் ஆகிய அனைத்தையும் முதல் கையெழுத்தில் தள்ளுபடி செய்து உத்தரவிட்டு விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தென்னை விவசாயிகள் கோரிக்கையின்படியும், தேர்தல் அறிக்கையில் கொப்பரை விலை குறையும் போதெல்லாம் விவசாயிகளிடமிருந்து கொப்பரையை வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், கொப்பரை தேங்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் 20 மாவட்டங்களில் கூட்டுறவுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக நேரடி கொள்முதல் மையங்கள் துவக்கப்பட்டு, கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்ய உத்தரவிட்டுள்ளார்கள்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தமிழகத்தில் 2ஆம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தவும், விவசாய உற்பத்தி அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயை பெருக்கும் பொருட்டு கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 50,94,636 விவசாயிகளுக்கு ரூ.23,214.24 கோடி பயிர்க்கடன் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வரலாறு காணாத அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 8,28,080 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3,236.22 கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு (2016–17) ரூ.6,500 கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 31.5.2016 வரை 31,036 விவசாயிகளுக்கு ரூ.186.81 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புற பகுதியில் வசிக்கும் விவசாயிகள் தாங்கள் விளைவித்த விளைபொருட்களை உரிய விலை கிடைக்கும்வரை சேமித்து வைக்கும்பொருட்டு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.**489.63** கோடி மதிப்பில் **5,10,600** மெ.டன் கொள்ளளவு கொண்ட **3,879** சேமிப்பு கிடங்குகளை கட்டி கொடுத்துள்ளார்கள். இச்சேமிப்பு கிடங்களில் இருப்பு வைக்கும் பொருட்களுக்கு சந்தை விலையில் **60** முதல் **80** சதவிகிதம் வரை தானிய ஈட்டுக் கடன் பெறும் வசதியையும் **மாண்புமிகு அம்மா** அவர்கள் உருவாக்கி தந்துள்ளார்கள். அதனடிப்படையில் **3,145** சேமிப்பு கிடங்குகளை பயன்படுத்திய **29,376** விவசாயிகளுக்கு ரூ.**39970.29** இலட்சம் அளவிற்கு தானிய ஈட்டுக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களால் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக முதலீட்டுக் கடன், நகைக்கடன், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான கடன், மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன் போன்ற அனைத்து வகையான கடன்களையும் பொதுமக்கள் வாங்கி பயன்பெற்று அவர்களது வாழ்வாதாரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களின் முத்தான திட்டங்களான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திட்டத்தின்கீழ், சென்னை மாநகரில் **2** நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை உட்பட **72** பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் காய்கறிகள் குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இக்கடைகள் வாயிலாக **6.6.2016** வரை **16,352** மெ.டன் காய்கறிகள் ரூ.**47.71** கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், அனைத்து தரப்பு மக்களும் **15** சதவிகிதம் வரை தள்ளுபடி விலையில் தரமான மருந்துகளை பெற்று பயனடையும் வகையிலான **106** அம்மா மருந்தகங்கள் மற்றும் **189** கூட்டுறவு மருந்தகங்கள் வாயிலாக இதுவரை ரூ.**341.40** கோடி மதிப்பிலான தரமான மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஏழை எளிய மக்களின் பசிப்பிணி போக்கும் மகத்தான திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை, **1.85** கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கும் அரும்பணியினை கூட்டுறவுத் துறை சார்ந்த **32,514** நியாய விலைக் கடைகள் மேற்கொண்டு வருகின்றன. கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுவிநியோகத்திட்டம் மற்றும் சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை எவ்வித புகாருக்கும் இடமளிக்காத வகையில், தங்குதடையின்றி உடனுக்குடன் வழங்கவேண்டும் என்றும், அனைத்து நியாயவிலைக் கடைகளும், குறித்த நேரத்தில் திறக்கப்பட வேண்டும் என்றும், கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் கட்டுப்பாடற்ற பொருள்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக்கூடாது என்றும், இதில் முறைகேடு ஏதேனும் இருப்பின் சம்மந்தப்பட்ட விற்பனையாளர் மற்றும் அலுவலர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா** அவர்களின் எண்ணத்தினை ஈடேற்றும் வகையில் பசிப்பிணி அகற்றும் பணியினை மேற்கொண்டு வரும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மக்கள் நலன் ஒன்றினையே கருத்திற்கொண்டு, பொது விநியோகத் திட்டத்தில் எவ்வித புகார்களுக்கும் இடம் தராத வகையில் அர்ப்பணிப்போடு பணியாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.த.ஆனந்த், இ.ஆ.ப., முனைவர் க.இராஜேந்திரன், திரு.இரா.கார்த்திகேயன், திரு.எம்.மோகன், திரு.மு.செந்தமிழ்ச்செல்வன், முனைவர் மு.ராஜசேகர், திருமதி க.பிருந்தா, திரு.பா.பாலமுருகன், திரு.ம.அந்தோணிசாமி ஜான் பீட்டர் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**